24.10.2024
அசல் வழக்கு எண்: 105/2016

பி.வா.சா.1 சாட்சி பாண்டியம்மாள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1 முதல் 3 வாதிகள் மூவரும் என்னுடன் பிறந்தவர்களா என்றால் ஆமாம். 4ம் வாதி அலமேலு என்பவர் 3ம் வாதியின் மனைவி என்றால் சரிதான். எனக்கு எத்தனை ஆண் மக்கள் பெண் மக்கள் என்றால் 2 ஆண் மக்கள் ஆவார்கள். அவர்கள் பெயர்கள் ஜெயப்பாண்டி மற்றும் சௌந்தரபாண்டி என்றாலும் இந்த வழக்கில் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் என்றால் சரிதான். தாவா சொத்து எனது தாத்தாவிற்கு பூர்வீக சொத்துக்களா அல்லது கிரைய சொத்துக்களா என்றால் பூர்வீக சொத்துக்கள் ஆகும். எனக்கு எப்போது திருமணமானது என்றால் 45 ஆண்டுகள் ஆகிறது. எனது தாயார் பெயர் என்ன என்றால் மூக்காயியம்மாள் என்ற சிங்காரம்மாள் ஆகும். வாதிகள் என்மீது என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று படித்து தெரிந்துகொண்டேனா என்றால் எனக்கு படிக்க தெரியாது. நான் எனது வழக்கறிஞரிடம் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் எனது வழக்கறிஞர் சொல்லவில்லை. நான் பதிலுரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி பி.வா.சா.1 குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)